JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# தேம்பாவணியில் விளங்கும் மருந்து

**நெறியாளர் : முனைவர் இ.சகாயமேரி அவர்கள்**

**உதவி பேராசிரியை, தமிழ்த்துறை**

**ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி,**

**திருநெல்வேலி**

**த. செல்வ ரமே'**
முனைவர் பட்ட ஆய்வாளர்
ராணி அண்ணா அரசு மகளினர்
கல்லூரி-திருநெல்வேலி

**அறிமுகம் :**

"வீரமா முனிவர் தைரிய நாதர்
விரிதமிழ்க் கலைமணம் கமழும்
ஆரமா முனிவர் அகத்தியர் போலே
அருளினார் அரியநன் னூல்கள்
சாரமாம் தேம்பா வணியினைத் தொடினும்
தமிழ்மணம் கமழும்என் கரமெ
ஈரமாய் நெஞ்சில் இடம்பெற நாட்டால்
இன்பமாய் மலரும் என் வாழ்வே"

என்ற பன்மொழிப் பாவலர் சுத்தானந்த பாரதியாரின் பாடல் வரிகளுக்கேட்ப, பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ்க் காப்பிய உலகில் வியக்கத் தக்கது எனலாம். அதுதான் இத்தாலிய நாட்டுத் துறவியொருவர், தம் முப்பதாம் வயதைக் கடந்து, தமிழகம் போந்து, மொழி பயிலத் தொடங்கி அதிலே திறன் பெற்றுக் காப்பியம் படைத்த அரிய நிகழ்ச்சியாகும். முனிவர் என அழைக்கப்பெறும் பெசுகி அடிகளாராவர் அவர்தம் படைப்பே தேம்பாவணி என்னும் தீந்தமிழ் காப்பியம் கத்தோலிக்க மறையினரும் கன்னித் தமிழைக் கற்றுத் துறைபோய வல்லுநரே என்பதனை உலகிற்கு எடுத்துக் காட்டிய தீம்பாவணி சொல்லோவியம், தமிழ் முனிவருள் ஒரு தனி முனிவர் என ஏற்றிப் போற்றப்பபெறும் சிறப்பிற்குரிய பாவலர் யாத்தளித்த பாவியம் இத்தகு சிறப்பு வாய்ந்த தேம்பாவணியில் மருந்து பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ள பகுதிகளை ஆய்ந்து அறிவது இக்காப்பியத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கும்.

**1. புண் ஆற்றும் மருந்து**

"வண் கனியக் கவின் பூண்ட வடிவம் சூட்டி
விழைவு இயற்றும் குழவி என இங்கண் தோன்றி
புண்கனியக் குளிர்ந்து ஆற்றும் மருந்து போன்றான்
புலவர் எலாம் வருந்திலும் தம் புகழின் மிக்கோன்"

- காட்சி படலம் : 36.

என்ற வரிகளில் காப்பியத் தலைவனை அறிமுகப்படுத்தும்போது, உடலிலே ஏற்பட்ட புண்ணை ஆற்றும்படியான மருந்து போன்றவன் என அறிமுகப்படுத்துகிறார். அம்மருந்தானது காயப்பட்ட புண்ணில் இடும்போது குளிர்ந்து காயத்தை ஆற்றுகிறது காயப்பட்ட காயத்தை ஆற்ற வல்லது அம்மருந்து ஆகும் அத்தகு சிறப்பு வாய்ந்த புண் ஆற்றும் மருந்தாக காப்பியத் தலைவனைக் குறிப்பிடுவது சாலச் சிறந்தது.

| | | |
|---|---|---|
| கிழிந்த புண் மேல் குளு மருந்து உறழ | - | வாமண் ஆட்சிப்படலம் : 2 |
| 'புண் காத்த மருந்தன்ன' | - | மகவருள் படலம் : 19 |
| புண் கனிந்த மருந்தெனக் | - | கருணையன் மாட்சி படலம் : 83 |
| புண்ணுளோர் மருந்து ஒத்தென் | - | பிரிந்த மகவை காண்படலம் : 8 |
| புண்கனிய மருந்தன்னான் | - | முடிசூட்டுப்படலம் : 97 |
| புண் கனிந்த மருந்தொப்ப | - | ஈரறம் பொருத்து படலம் : 17 |

ஆகிய பாடல் வரிகளில் புண் ஆற்றும் மருந்தினை குறிப்பிடுகிறார்.

**2. நற்பலன் தரும் மருந்து :**

"இன்பு அருந்தி நாம் உண்ட விடத்தைத் தீர்க்க
இயல்பு ஆம் கைப்பு என, நாமே உண்டால் நன்றே
துன்பு அருந்தி, தான் மருந்து நமக்கே ஆகி,
துயர் துய்த்த பயன் எல்லாம் நமக்கே ஈவான்"

காட்சிப் படலம் : 22

என்ற பாடல் வரிகளில் நாம் பாவத்தை பருகி துன்பத்தை அனுபவிக்கும் போது, தாமே மருந்தாகி துயரை எல்லாம் துடைத்து, நம் வாழ்வில் எல்லா நலனையும் நல்கும் அருமருந்தென இறைவனைக் குறிப்பிடுகிறார். பாவ நோயில் அமிழ்ந்து துயருற்று வாழும் மக்களுக்கு தாமே மருந்தாக விளங்கி, துயரங்களை போக்கி, நற்பலனைத் தருகின்ற அருமருந்தினை இப்பாடல் மூலம் அறியலாம்.

**3. உயிர் காக்கும் மருந்து**

**"மறம் மேவினர் கை வசம் ஆகுப, ஈங்கு
ஊற மேவிய காதல் உள் ஆயினையோ?
திறம் மேவிய சீவனியே, ஆகுதே
அறமே அருளே கருணாகரனே"** **- காட்சிப் படலம் : 24**

இவ்வரிகளில் ' உயிரைக் காக்கும் திறமுள்ள மருந்தே! எனக் குறிப்பிடுகிறார்.

உடலும், உயிரும் கலந்த மனித உருவுக்கு உயிர் காக்கும் வலிமை வாய்ந்த மருந்தாக விளங்குவதாக குறிப்பிடுகிறார். மேலும் இம்மருந்து வலிமைமிக்க வீரியமின்ன மருந்தாக செயல்படுவதால் உயிரை சிறப்பாக

பாதுகாக்கின்றது. ஆகவே உயிர் காக்கும் மருந்தென இறைவனைக் குறிப்பிடுவது பாதுகாப்பை உறுதி செய்கிறது. அதுபோன்று மற்றொரு பாடல் வரிகளில்,

நோயும், ஒக்குமேல் நுகர்ந்து உயிர்தரும் மருந்து காட்சிப் படலம் : 98 என்ற வரிகளில் உயிர்தரும் மருந்த எனக்குறிப்பிடுகிறார்.

**4. பரிபூரண மருந்து :**

"நுரையென வாழ்க்கை காண்மின்
நோயென உயிரைக் காமின்
கரையெனக் கதியை வெ.்.குமின்
கசடறு நெறியி(து) என்றான்"

மீட்சிப் படலம் : 8

எனும் வரிகளில் நோமை வருமுன்னும் வந்த பின்னும் காக்கும் மருந்து எனக்குறிப்பிடுகிறார். நோயை வருமுன் காப்பது மூலம் உடலை பாதுகாக்க முடியும். துற்போது நிலவிவரும் கொரோனா ஆட்கொல்லி நோயிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள தன் சுத்தம், தடுப்பூசி ஆகியன வருமுன் காக்கும் நடவடிக்கை ஆகும். அதுபோலவே தனிமைப் படுத்திக் கொள்ளுதல், மரந்து உட்கொள்ளுதல், நோய் வந்த பின் காக்கும் நடவடிக்கை ஆகும். அதுபோலவே அக்காலத்தே விளங்கும் நோய் வருமுன்னும் வந்த பின்னும் காக்கின்ற பரிபூரணமான மருந்து இப்பாடல் வரிகளில் குறிப்பிடுகிறார்.

**5. உரு மருந்து**

"நோய்க்கு ஒரு மருந்தன்னான்
நோயை ஒக்க மருந்தினை ஒக்கும்"

- முடிசூட்டுப் படலம் : 18, 45

இப்பாடல் வரிகளில் எல்லா நோய்களுக்கும் பொதுவான ஒரே மருந்து செயல்படுகிறது அந்த ஒரே மருந்து ஒவ்வொரு நோய்க்கும் ஏற்றவாறு சுகமளிக்கும் விதமாக செயல்படும் எனக் குறிப்பிடுகிறார். இதனை 'உரு மருந்து' என அழைக்கிறார்கள். இன்றைக்கும் காய்ச்சல் தலைவலி என பல உடல் உபாதைகளுக்கு பாராசிட்டமால் (ியசயளவைைஉயட) மாத்திரை சிறந்த மருந்தாக செயல்படுவது போல எல்லா நோய்க்கும் ஒரே மருந்தாக, உரு மருந்தினைக் குறிப்பிடுகிறார்.

"நோயே ஒக்க மருந்தினை ஒக்கும்" முடிசூட்டுப் படலம் : 45

என்ற இவ்வரிகளில் உரு மருந்தினைப் பற்றி குறிப்பிடுகிறார்.

**6. நன் மருந்து**

"நோய்க் கடுத்த மெய் தளர்ந்தனர் மெலிவரும் மருந்தென
நோயொக் கும்கடை நுளித்தநன் மருந்தொக்கும்

- ஞாபகப் படலம் : 21, 23

என்ற பாடல் வரிகளில் மனிதனுக்கு வரும் நோயினால் உடல் தளர்ந்து மெலிந்து வாடும்போது மருந்து சுகமளிக்கிறது. நோயினை முழுமையாக குணமாக்கும் திறன் படைத்தது நல்ல மருந்தாகும். அத்தகு சிறப்புமிக்க நன் மருந்து பற்றி குறிப்பிடுவது இந்த நூலின் சிறப்பு ஆகும்.

**7. இனிய மருந்து :**

நோயொக்கு மவர்க்கின்பம் நுனித்த உயிர் மருந்தாக்கம்

- தூதுரை படலம் : 40

என்ற வரிகளில் நோயை உடைய மனிதருக்கு இன்பத்தை விளைவிக்கும் விதமாக, உயிர் தரு மருந்தாக குறிப்பிடுகிறார். ஒரு நோயினை உடைய நோயாளி உடலளவிலும் மனதளவிலும் சோர்ந்து துன்புறுவர். ஆனால் துன்பத்தை ஒழித்து மகிழ்ச்சியை தருகின்ற இனிமையான மருந்து பற்றி இவ்வரிகளில் குறிப்பிடுகிறார்.

**8. தீராத வியாதிக்கு மருந்து :**

தாயொத்தார்வோடு தரித்திரர்க் கனைத்து மேயாகித்
தீயொத்தாகுலந் தீர்த்துளங் குளிர்வண் முகிலாய்ப்
பேயொத்தாலதைப் பெயர்க்கணி பொத்தனர் பெயரா
நோயொத் தாயகா ணுகர்ந் துயிர் தருமருந்தொத்தார்

ஈரறம் பொருத்து படலம் : 67

- இவ்வடிகளில் தீராத வியாதி அடைந்த ஒருவனுக்கு உயிர் தரும் விதத்தில் மருந்து செயல்படுவதாக குறிப்பிடுகிறார். பிறவியிலேயே உண்டான வியாதியாக இருந்தாலும், பல்லாண்டுகளாக குணமாகாத வியாதியாக இருந்தாலும், இறைவன் உயிர்தரும் மருந்தாக விளங்குகிறார். தீராத வியாதியானாலும் உயிர் தரும் மருந்து இறைவனே ஆவார்.

**நிறைவுரை :**

நோய்நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் குறள் : 948

என்று வள்ளுவன் வாக்கின்படி நோய்க்கு மருந்து அவசியம் மருந்து புண்ணை ஆற்றுகிறது நற்பலன் தருகிறது மருந்து உயிர்ப்பிக்கிறது பரிபூரண சுகம் தருகிறது மருந்து எல்லா நோய்களுக்கும் பொதுவான பலன் தருகிறது மருந்து உடலுக்கு நன்மை பயக்கிறது மருந்து உடலுக்கு இனிமை சேர்க்கிறது மருந்து தீராத வியாதியையும் போக்குகிறது.

இவ்வாராய்ச்சி கட்டுரை மூலம் தேம்பாவணியில் விளங்கும் மருந்து பற்றி கசடற அறிந்திட்டோம்.

**துணை நின்ற நூற்கள்**


1. சூ. இன்னாசி, தேம்பாவணித் திறன் பி. ஆர். லித்தோகிராபர்ஸ், 1994.
2. டாக்டர் ஜி. ஜாண் சாமுவேல், கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம் - ஓர் அறிமுகம், ஆசிரியவியல் நிறுவனம், 2008.
3. யோ. ஞான சந்திர ஜான்சன், கிறித்தவக் காப்பியங்கள், முனைவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2008.